# பரிபாடல்

விடையளி:

1.உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமி என்பதைப் பரிபாடல் வழி விளக்குக. ( அல்லது ) புவியின் உருவாக்கம் குறித்து பரிபாடல் கூறும் கருத்துகளை விளக்குக. (அல்லது ) இலக்கியங்கள் அறிவியல் கோட்பாடுகளைத் தாங்கி நிற்கின்றன என்பதை கீரந்தையாரின் பாடல் வழி விளக்குக ( அல்லது ) விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக் கருவளர் வானத்து இசையில் தோன்றி - என்ற பாடல்வழி வரும் கருத்துகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

- வெட்ட வெளியில் உலகம் தோன்றக் காரணமான கரு பேரொலியுடன் தோன்றியது.
- உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானமே முதல் பூதத்தின் ஊழியாக இருந்தது.
- பின்பு, அணுக்களின் ஆற்றல் ஆர்ப்பரித்து பருப்பொருள்கள் சிதறும்படியாக ஊழிக்காலங்கள் கடந்து சென்றன.
- புவியானது, நெருப்புப் பந்து போல் உருவாகி ஊழிக்காலம் தொடங்கியது.
- அடுத்து, மழைபொழிந்து, பூமி குளிரும்படி ஊழிக்காலம் தொடங்கியது.
- தொடர்ந்து பெய்த மழையால் பூமி நிறை வெள்ளத்தில் மூழ்கியது.
- இறுதியாக, இந்தப் பூமியில் உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.
- அதுமட்டுமன்றி, அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலை பெறும்படியான ஊழிக்காலமும் தோன்றியது.

2. பரிபாடல் பற்றி எழுதுக.

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- எழுதியவர் கீரந்தையார்.
- "ஓங்கு பரிபாடல்" என்னும் புகழுடையது.
- பண்ணோடு பாடப்பட்ட நூல்.
- இதில் 70 பாடல்கள் உள்ளது என்பர்.

- நமக்குக் கிடைத்தவை 24 பாடல்களே.
- அக்கால மக்களின் வாழ்க்கை முறை, அறிவாற்றல் போன்றவற்றை இந்நூலால் அறியலாம்.